தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST




மரம் 12 நவம்பர் 2012 கனி 12

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal
Registration No.DDL/19/2012-2014
Posted at Batlagundu Post office on 10 th Nov. 2012

To

பூமியும் அதின் நிறைவும்
கர்த்தருடையது
1கொரிந்தியர் 10:26


*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA




BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com

*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M

- கிதியோன் என்றால் "பராக்கிரமசாலி" என்று எபிரெயு பாஷையில் அர்த்தம்.
- இவன் இஸ்ரவேலிலே மனாசே கோத்திரத்தான். தன் தகப்பன் வீட்டில் எல்லாரிலும் சிறியவன் - நியா.6:15)
- இஸ்ரவேலர் மீதியானியரின் கீழ் இருக்கும்போது கிதியோன் ஏழுவருஷம் நியாயம் விசாரித்தான் - (நியா.1:1)
- 300 பேராலே மீதியானியரை முறியடித்தான் - (நியா.7:7)
- கிதியோன் ஒரு ஏபோத்தை உண்டாக்கினான் இஸ்ரவேலெல்லாரும் அதைப் பின்பற்றி சோரம்போனார்கள் அது கிதியோனுக்கும் அவன் வீட்டாருக்கும் கண்ணியாயிற்று (நியா.8:27)
- கிதியோனுடைய குமாரர் 70 பேர். அவன் ஒப்ராவிலே தன் தகப்பனுடைய கல்லறையில் பூரண வயதில் மரித்து அடக்கம்பண்ணப்பட்டான் - (நியா.8:32)
- ஒப்ராவில் ஒரு பலிபீடத்தைக் கட்டி அதற்கு 'யெகோவா ஷாலோம்' என்று பேரிட்டான் - (நியா.6:24)




## தேவன் உங்களோடேகூட இருக்க...

நீங்கள்

சந்தோஷமாயிருங்கள்
நற்சீர் பொருந்துங்கள்
ஆறுதலடையுங்கள்
ஏக சிந்தையாயிருங்கள்
சமாதானமாயிருங்கள்
2கொரிந்தியர் 13:11



"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



# வேத அறிவுப் போட்டி எண்: 147

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கர்ட்டில் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. சிறியோர் பெரியோர் ஸ்திரீ புருஷர் எல்லாரிலும், இஸ்ரவேலின் தேவானகிய கர்த்தரைத் தேடாதவன் எவனோ அவன் என்ன செய்யப்படவேண்டும் என்று உடன்படிக்கை செய்தார்கள்?
2. எருசலேம் நகரத்துக்குப் புறம்பே தள்ளப்பட்டு, கல்லெறியுண்டு மரித்தவன் யார்?
3. பரிசுத்த வித்து தேசங்களின் ஜனங்களோடே கலந்துபோனதால் தன் வஸ்திரத்தையும், தன் சால்வையையும், கிழித்து, தன் தலையிலும் தன் தாடியிலுமுள்ள மயிரைப் பிடுங்கித் திகைத்தவனாய் உட்கார்ந்தவன் யார்?
4. நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்கு எப்படி காத்திருக்கவேண்டும்?
5. நம்முடைய பகைஞராகிய புறஜாதியார் நிந்திக்கிறதினிமித்தம் நீங்கள் நம்முடைய தேவனுக்குப் பயந்து நடக்கவேண்டாமா என்றவன் யார்?
6. உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கவேண்டும் என்று எழுதிய அப்போஸ்தலன் யார்?
7. அகாஸ்வேரு ராஜா வீற்றிருந்த அரண் மனையின் பெயர் என்ன?
8. இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்னவர் யார்?
9. தன் பிறந்த நாளை சபித்தவன் யார்?
10. கண்களையும் அப்போஸ்தலனாகிய பவுலுக்குப் பிடுங்கி கொடுக்கவும் ஆயத்தமாக இருந்த சபையார் எவர்கள்?

## உனது ஜீவியத்தில்

நீ

நடக்கும்போது உனக்கு வழிகாட்டும்
படுக்கும்போது உன்னைக் காப்பாற்றும்
விழிக்கும்போது உன்னோடே சம்பாஷிக்கும்





நீதிமொழிகள் 6:22

சிறுவர் பகுதி

# பேலியாளின் மக்கள்

**வேத பகுதி: 1சாமுவேல் 2:12–17**



ஏலியின் குமாரரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறியவில்லை. ஏலி யார் என்று தெரியுமா? அவன் தேவனுக்கு ஊழியம் செய்யும் ஆசாரியனாயிருந்தான். அவனுடைய பிள்ளைகளும் அந்த வேலையைச் செய்தார்கள். ஆனால் அவர்கள் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையவில்லை. இன்றைக்கும் அப்பா வாத்தியார் என்றால் மகன் முட்டாள், அப்பா போலீஸ் அதிகாரி என்றால் மகன் திருடன், அப்பா டாக்டர் என்றால் மகன் நோயாளி என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். எல்லோரும் அப்படியல்ல ஒரு சிலர். அதைப்போல ஏலி ஆசாரியன் பிள்ளைகளோ கர்த்தரை அறியாதவர்கள்.

இவர்கள் ஜனங்களை நடப்பித்த விதம் என்னவென்றால், எவனாகிலும் ஒரு பலியைச் செலுத்துங்காலத்தில் இறைச்சி வேகும்போது, ஆசாரியனுடைய வேலைக்காரன் மூன்று கூருள்ள ஒரு ஆயுதத்தைத் தன் கையிலே பிடித்துவந்து, அதினாலே, கொப்பரையிலாவது பானையிலாவது குத்துவான்; அந்த ஆயுதத்தில் வருகிறதையெல்லாம் ஆசாரியன் எடுத்துக்கொள்ளுவான்; அப்படி அங்கே சீலோவிலே வருகிற இஸ்ரவேலருக்கெல்லாம் செய்தார்கள். கொழுப்பைத் தகனிக்கிறதற்கு முன்னும், ஆசாரியனுடைய வேலைக்காரன் வந்து பலியிடுகிற மனுஷனை நோக்கி: ஆசாரியனுக்குப் பொரிக்கும்படி இறைச்சி கொடு; பச்சை இறைச்சியை அல்லாமல், அவித்ததை உன் கையிலே வாங்குகிறதில்லை என்பான். அதற்கு அந்த மனுஷன் இன்று செய்யவேண்டியபடி முதலாவது கொழுப்பைத் தகனித்துவிடட்டும்; பிற்பாடு உன் மனவிருப்பத்தின்படி எடுத்துக்கொள் என்று சொன்னாலும்; அவன் அப்படியல்ல, இப்பொழுதே கொடு, இல்லாவிட்டால் பலவந்தமாய் எடுத்துக்கொள்வேன் என்பான்.

ஆதலால் அந்த வாலிபரின் பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரிதாயிருந்தது; மனுஷர் கர்த்தரின் காணிக்கையை வெறுப்பாய் எண்ணினார்கள். பார்த்தீர்களா உற்சாகமாகக் கர்த்தருக்கு காணிக்கை கொடுக்கக் கூடியவர்கள் கூட வெறுப்பாய் எண்ணும்படி நடந்துகொண்டார்கள். இவர்களுடைய பாவம் கர்த்தருடைய பார்வையில் மிகவும் பெரிதாக இருந்தது. நீங்கள் இவ்விதமாக ஊழியம் செய்கிறவர்களைப் பார்த்து, ஏலியின் குமாரர்களுடைய பாவத்தை அவர்களுக்கு நினைப்பூட்டி எச்சரிப்பு செய்யுங்கள். அவர்கள் தேவ கோபத்திற்கு தப்பிக்கொள்ளட்டும்.

**மனப்பாட வசனம்:**

**“மாறுபாடுள்ள இருதய முடையவர்கள் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்; உத்தம மார்க்கத்தாரோ அவருக்குப் பிரியமானவர்கள்” (நீதி.11:20).**




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
# THE WORD OF CHRIST

**புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்**

**மரம் - 12 நவம்பர் - 2012 கனி - 12**


ஆசிரியருரை

# தேவனுடைய சந்ததி

## Offspring of God



பரிசுத்த சந்ததியைப் பற்றி வேதாகமம் பேசுகிறது. அது எப்படிப்பட்டது? எங்கிருந்து வந்தது? அது யாரைப்பற்றியது? போன்ற கேள்விகளை எழுப்புவோமானால். அதற்கான பதிலை வேதாகமத்தின் துணைகொண்டு அறியலாம். **முதலாவது அது எப்படிப்பட்டது என்று நாம் பார்க்கும்போது,** “தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்” என திருமறை அதாவது பரிசுத்த வேதாகமம் போதிக்கிறது (ஆதி.1:27). இந்த வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த தேவன் எப்படியிருக்கிறாரோ அந்த சாயலாகவே மனுஷனை சிருஷ்டித்தார் என காண்கிறோம். அவருக்கு ஒரு உருவத்தை நாம் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாது. ஏனெனில் தேவன் ஆவியாயிருக்கிறார் என வேதத்தில் படிக்கிறோம். அவர் எப்படியிருக்கிறாரோ அப்படியே மனுஷனை தமது சாயலின்படி சிருஷ்டித்தார்.

இங்கே மனிதர்கள் பலர் பலவிதமாக நினைக்கின்றனர். மனிதன் குரங்கிலிருந்து வந்தான் அல்லது வேறொரு வகையில் வந்தான் என்று சொல்லிக்கொண்டே போகின்றனர். பலநூற்றாண்டுகளாக மனிதன் வாழ்ந்துகொண்டே இருக்கிறான் என்பதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். ஒவ்வொரு ஜந்துக்களும் அதனதனுடைய இனத்தை ஒருபுறம் பெருக்கிக்கொண்டே போதுகிறது இன்னொரு புறம் அழிந்துகொண்டே போகிறது. அவ்வாறே மனிதனுடைய சந்ததியும் பெருகிக்கொண்டே போகிறது ஒரு புறம் மனிதனுக்கு அழிவும் வந்துகொண்டே இருக்கிறது. “தேவன் பூமியிலுள்ள ஜாதிஜாதியான காட்டுமிருகங்களையும், ஜாதிஜாதியான நாட்டுமிருகங்களையும், பூமியில் ஊரும் பிராணிகள் எல்லாவற்றையும் உண்டாக்கினார்; தேவன் அது நல்லது என்று

கண்டார்'' என வேதம் போதிக்கிறது (ஆதி.1:25). பூமியிலே தேவனால் உண்டாக்கப்பட்ட எல்லாமே நலமான நோக்கத்தோடே உண்டாக்கப்பட்டுள்ளது. பூமியிலே வேண்டாததைவைகள் என்று ஒன்று இல்லை. ஏனெனில் அது நல்லது என்று கண்டார் என காண்கிறோம். ஆனால் பாருங்கள் எல்லாமே அது அது தன் தன் வேளையை செய்கிறது. பறவைகளைப் பாருங்கள் காலை எழுந்தவுடன் கர்த்தரைத் துதிக்கிறது. தேவன் என்ன நோக்கத்திற்காக அவைகளை சிருஷ்டித்தாரோ அதனுடைய வேலையை தவறாமல் செய்கிறது. இன்றைக்கு மரங்கள் காடுகளில் இவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறது என்றால் அதற்கு மூல காரணம் பறவைகளுடைய எச்சங்கள் மூலமாக விதைகள் விழுந்து மரங்களாக வளர்ந்திருக்கின்றன இதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால் தேவனால் அவருடைய சாயலில் உண்டாக்கப்பட்ட மனுஷன் மட்டும் தேவசித்தத்தை நிறைவேற்றாமல் வாழ்ந்துகொண்டு இருக்கிறான். ஆகையால் ''தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது'' (ஆதி.6:6). நாம் சிலவேளைகளில் நம்முடைய பிரச்சனைகள் பெரியது என்று எண்ணுகிறோம். ஒருநாளாவது தேவனுடைய சித்தம் செய்யும்படியாக நம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறோமா? என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். முதலாவது உண்டாக்கப்பட்ட ஆதாம் பாவம் செய்து தேவசமுகத்தைவிட்டு அனுப்பப்பட்டான். அவனுடைய பாவத்தின் விளைவால் பாவம் செய்யாதவர்களையும் பாவம் ஆண்டுகொண்டது. இப்படி பாவத்திற்கு அடிமைப்பட்ட மனுஷனை மீட்கும்படியாகவும் பரிசுத்த சந்ததியாக உருவாக்கும்படியாகவும் இயேசுவை தேவன் இவ்வுலகிற்கு அனுப்பினார். பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார். ''ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்'' என்று பவுல் கொரிந்திய கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறதை 1கொரிந்தியர் 15:22-ல் படிக்கிறோம். மேலும் ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின எனக் காண்கிறோம். நீங்கள் புதுசிருஷ்டியாயிருக்க பாவத்துக்குச் செத்து நீதிக்குப்பிழைக்கும்படி உங்களை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுங்கள்.

**இரண்டாவது தேவனுடைய சந்ததி எங்கிருந்து வந்தது என்ற கேள்வி எல்லோருக்கும் ஏற்படுகிறது.** முதன் முதலில் ஏதேன் தோட்டத்தில் மனுஷனை சிருஷ்டித்து அதை பண்படுத்தவும் காக்கவும் வைத்தார் என படிக்கிறோம். அங்கே தான் முதல் சந்ததி உருவானது. ஆனபடியால் பவுல் சொல்கிறார் ''நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனுஷருடைய சித்திரவேலையினாலும் யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்கு தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது'' என்கிறார்



# திருச்சபை வரலாறு

-John S.Nathan
9444443378



5. IRANAEUS (130 - 200 - AD இரானாயிஸ்) சிமிர்வில் வளர்ந்தவர் பாலிகிராப் மற்றும் பாப்பியாஸ் அவர்களின் வேதாகம மாணவர். பல இடங்களுக்கு பயணம் செய்து தேவ ஊழியம் செய்தவர். காயூல் GAUL லில் உள்ள லேயான்ஸ் Lyons சபை ஊழியர். கள்ளபோதனைகளுக்கு எதிரானவைகளைக்கடுமையாக எதிர்த்ததில் முதன்மையானவர். இரத்த சாட்சியாக மரித்தவர். பாலிகிராப் அமர்ந்து பிரசங்கித்த இடங்களை பழைய நினைவுகளை மறவாமல் நினைத்தும், அன்பின் சீடர் யோவானுடன் அவருக்கிருந்த நல்உறவை மற்றும் அவர் பிரசங்கித்தவைகளை மக்களுக்கு போதித்து.பிரசங்கித்து வருகிறேன் மற்ற அப்போஸ்தலர்களை பற்றியும் அவர் கூறியதையும் மட்டும் பிரசங்கிக்கிறேன் என்று கூறியுள்ளார்.

இயேசு கிறிஸ்து போதித்த, பிரசங்கித்தவைகளை எல்லாம் மனப்பாடமாக அவரின் சீடர்கள் அவர் வாயிலாகக் கேட்ட வாழ்வளிக்கும் வார்த்தைகளையும், அவர் செய்த அற்புத அடையாளங்களையும் கண்ணாரக்கண்டவைகளை அவரின் சீடர்கள் எல்லாம் கூறியுள்ள வார்த்தைகளை வேதாகமத்தின் அடிப்படையில் ஒத்திட்டு பார்த்து ஒவ்வொன்றையும் நினைவு படுத்தினார்.

ஓரிஜன் - (ORIGEN 185-254 - AD) ஆரம்ப கால சபையில் அதிகம் கற்றறிந்து போதித்தார். பல இடங்களுக்கு பயணம் செய்தவர்.அனேக மறை நூல்களை எழுதியவர். அவர் பேசுவதை எழுதி 20 க்கு மேற்பட்டவர்களால் எழுதப்பட்டவைகள். புதிய ஏற்பாட்டில் மூன்றில் இரண்டு மடங்கு மேற்கோள்கள் அவரால் எழுதப்பட்டது. தந்தை LEONIDAS இரத்த சாட்சியாக மரித்தவர். அவர் வாழ்ந்த அலெக்சாண்டிரியாவில் வாழந்து கடைசியில் இவரும் இரத்தசாட்சியாக மரித்தார். பாலஸ்தினியாவில் வாழந்தபோது கைதியாக கடும் துன்பங்களையும், வேதனைகளையும், சித்திரவதைகளையும் அனுபவித்தார்.

6. டெர்டுலியன் (Tertullian 160-220 - AD) கார்தேகேயை (Carthage) சேர்ந்த இலத்தீன் கிறிஸ்தவர் 2 ரோம வழக்கறிஞர், புறஜாதியானவர், நற்செய்தியை விசுவாசித்து, ஏற்றுக்கொண்டவர். கிறிஸ்துவுக்காகவும், கிறிஸ்தவத்திற்காகவும் போராடியவர்.

யுசிபியல் (Eusebius 264 -340AD) சபை வரலாற்றின் தந்தை சிசரியா (Caesarea) சபை ஊழியர். கான்ஸ்டி மதமாறியபோது அவரின் நட்பிற்கு பாத்திரமானவர். கிறிஸ்து முதல் நிசீயா ஆலோசனை கூட்டம் " From Christ to the Council of Nicaea" பற்றி (Ecclesiastical History") சபை வரலாற்றை எழுதியவர்.

**கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் - வெளி.14:13**

ராஜா சாத்ராக், மேஷாக், ஆபத்நேகோவை பார்க்கும்போது அக்கினியின் நடுவே நான்கு பேர் உலாவிக்கொண்டு இருப்பதை கண்டான். உடனே ராஜா தன் மந்திரிகளை நோக்கி நாம் மூன்று பேரை அல்லவா அக்கினியில் போட்டோம் இதோ நாலுபேர் விடுதலையாய் உலாவி வருகிறதை காண்கிறேன். அவர்களுக்கு ஒருசேதமும் இல்லை நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது என்றான் ராஜா அவர்களை பார்த்து வெளியே வாருங்கள் என்றான் அந்த மூன்று பேரும் அக்கினியில் நடுவில் இருந்து வெளியே வந்தார்கள் அதனை பார்த்த நேபுகாத்நேச்சார் ராஜா தேவனுக்கு ஸ்தோத்திரம் அவர்கள் தங்களுடைய தேவனைத்தவிர வேறொரு தேவனையும் சேவித்து பணியவில்லை என்று ராஜாவின் வாயினால் சொல்லும்படி அங்கு அவர்கள் நடந்துகொண்டார்கள். அதுமட்டுமல்லாமல் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு விரோதமாய் தூஷணவார்த்தையை சொல்லுகிற எந்த ஜனத்தானும் எந்த ஜாதியானும் எந்த பாஷைக்காரனும் துண்டித்து போடப்படுவான் என்று ராஜா சொல்லுகிறதை (தானி 3:19-29) பார்க்கிறோம். இவர்களுக்கு ஏற்பட்ட நிலைமை நமக்கு ஏற்பட்டு இருந்தால் நாம் கண்டிப்பாக ராஜா சொன்னதுபோல் அவனுக்கு கீழ்படிந்து இருப்போமா? ஆனால் அந்த மூன்று பேரும் தேவனிடத்தில் பக்தி வைராக்கியம் கொண்டிருந்ததினால் அங்கு ராஜா மனம் திரும்பும்படியாக இருந்தது. நாமும் கூட தேவனிடத்தில் பக்திவைராக்கியமாய் இருக்கும்போது நம்மை பார்த்து பலரும் பாவவாழ்க்கை விட்டு மனம்திரும்புவதற்கு நாம் சரியாக வாழவேண்டும் தேவனும் அதைதான் எதிர்ப்பார்க்கிறார்.

ஆம், பிரியமானவர்களே, வேதாகமம் நமக்கு ஒரு முன்னோடியாக இருக்கிறது. அதனை பின்பற்றி நாம் தினம் தினந்தோறும் தேவனுக்கு உண்மையாய் வாழ்வோம். தேவன் நம்மையும் இன்றும் என்றும் ஆசீர்வதிப்பாராக ஆமென்.

## வாசகர் கடிதம்...

நான் 'தமிழன்' TV-ல் Saturday 'உங்களை ஒப்புக்கொடுங்கள்' `Submit Yourself'
லூக்கா5:29 என்ற ஆதார வசனத்தை எடுத்து Message கொடுத்தது என் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்தது.
நான் உங்கள் மாத இதழையும் தொடர்ந்து படித்து பிரயோஜனமடைந்து வருகிறேன்.
வேறு ஏதாவது ஆவிக்குறிய Books இருந்தால் எனக்கு அனுப்பித்தாருங்கள்.
உங்கள் பதிலிற்காக ஆவலுடன் எதிர்பார்பேன்.

Thanks
Your`s
G.Rajesh Babu

## நடப்புச் செய்திகள்

- உக்ரைன் தேர்தல். ஆளும் கட்சி வெற்றி.
- மாவட்டம் தோறும் வானிலை புதிய வசதி அறிமுகம்.
- இணையதள பயன்பாட்டில் மூன்றாவது இடத்தில் இந்தியா.



(அப்.17:29). இன்றைய மானிட வர்க்கம் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவனை மறந்து அவருக்கு ஒப்பாக வெள்ளியினாலும் பொன்னினாலும் உருவங்களை செய்து இதுதான் நம்மை உண்டாக்கின கடவுள் என்று மனுஷனை வழி வழியாக நம்ப செய்து வருகிறது. இதை அநேகர் சிந்திக்காமல் அவைகளை வழிபட்டுக்கொண்டு அதற்காக பண்டிகைகளை ஏற்படுத்திக்கொண்டு ஆடிப்பாடி மகிழ்ந்துகொண்டாடுகிறார்கள். இதை தேவன் எதிர்பார்க்கிறாரா? என்ற கேள்வி அவர்களுக்குள்ளாக எழும்புகிறதில்லை. "நீங்கள் தேவனை அறிந்திருக்க, அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க பெலனற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி?" (கலா.4:9). பெலனற்ற வழிபாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து உங்களுடைய ஆத்துமாக்களை கெடுத்துக் கொள்ளாதிருங்கள். நோவா காலத்தில் என்ன நடந்ததோ அதே காரியம் இன்றும் நடந்துகொண்டிருக்கிறது. மோசேயினுடைய காலத்தில் மோசே கர்த்தரை சந்திக்கவும், உடன்படிக்கை கட்டளைகளைப் பெறவும், மலைக்கு கடந்து சென்றிருந்தபோது ஆரோன் ஜனங்களை வழிநடத்தினான். அப்பொழுது ஜனங்கள் மோசே வர தாமதித்தபோது; எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்கு உண்டுபண்ணும் என்று சொல்லி ஆரோனை துரிதப்படுத்தினார்கள். அவனோ ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றான். அவர்கள் அதைப்பணிந்துகொண்டார்கள். வனாந்தரத்தில் தங்களை வழிநடத்திக்கொண்டு வந்த உன்னதமான தேவனை மறந்தார்கள். இப்படி அநேக முற்பிதாக்கள் ஜீவனுள்ள தேவனை மறந்து தங்களுக்கு கேடு உண்டாக தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள்.

அப்படியே ராகேலுடைய தகப்பன் லாபான் தன் தெய்வங்களை யாக்கோபு திருடிக்கொண்டு சென்றுவிட்டான் என்று அவனைப்பின் தொடர்ந்தான். அப்பொழுது "ராகேல் அந்தச் சுரூபங்களை எடுத்து, ஒட்டகச் சேணத்தின்கீழ்வைத்து, அதின்மேல் உட்கார்ந்திருந்தாள். லாபான் கூடாரம் எங்கும் தடவிப்பார்த்தும், அவைகளைக் கண்டுபிடிக்கவில்லை" (ஆதி.31:34). பின்பு நடந்தது என்ன, அந்த சுரூபங்களை யாக்கோபு வாங்கி ஒரு கர்வாலி மரத்தின்கீழே புதைத்துப்போட்டான். அவைகள் வீணானவைகள் என்பதை யாக்கோபு நன்கு அறிந்திருந்தான் ஆனால் அவனுடைய மனைவியோ அவைகள் வீணானவைகள் என்பதை அந்நேரமட்டும் அறியாதிருந்தாள். அன்பான சகோதரனே, சகோதரியே நீ இந்த ராகேலைப்போல வாழ்ந்துகொண்டிருக்கின்றாயா? உன் தகப்பனுடைய விக்கிரகத்தை விட்டுவிடாதிருக்கிறாயா? அவைகள் உன்னை இரட்சிப்பதில்லை, உன் குடும்பத்தையும் இரட்சிப்பதில்லை. அவைகளால் ஒன்றும் செய்யமுடியாது. அவைகள் உண்டாக்கப்பட்டபடியே இருக்கும். நம்முடைய பூர்வீகம் நம்மை

காப்பதில்லை. ஆகையால் யோவான்ஸ்நானன் சொல்லும்போது; “மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள். ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ள நினையாதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்றார் (மத்.3:9,10). நாம் மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுக்கவேண்டுமே தவிர நான் இன்னாரின் குமாரன் என்று சொல்லிக்கொள்வதிலோ அல்லது இந்த பரம்பரையைச் சார்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்வதிலோ பயன் ஒன்றுமில்லை. நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் என திருமறை நமக்குப்போதிக்கிறது.

**மூன்றாவதாக, அந்த சந்ததி யாரைப்பற்றியது என பார்க்கும்போது;** வேதம் இவ்விதமாக போதிக்கிறது. “ஆதலால், சுதந்தரமானது கிருபையினால் உண்டாகிறதாயிருக்கும்படிக்கு அது விசுவாசத்தினாலே வருகிறது; நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்களாகிய சந்ததியாருக்குமாத்திரமல்ல, நம்மெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாமுடைய விசுவாசத்தைச் சார்ந்தவர்களான எல்லாச் சந்ததியாருக்கும் அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கும்படிக்கு அப்படிவருகிறது” (ரோம.4:16). ஆபிரகாமுடைய விசுவாசத்தை பெற்றுக்கொள்கிற ஒவ்வொருவரும் இந்தச் சந்ததியில் அங்கமாகின்றனர். மேலும், “மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள் தேவனுடைய பிள்ளைகளல்ல, வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகளானவர்களே அந்தச் சந்ததி என்றெண்ணப்படுகிறார்கள்” எனக்காண்கிறோம் (ரோம.9:8). இதினாலே மாம்சத்தின்படி யூதனானாலும் அவன் மேன்மைபாராட்ட இடமில்லை என அறிகிறோம். “அல்லாமலும் ஏசாயா முன்னே சொன்னபடி; சேனைகளின் கர்த்தர் நமக்குள்ளே ஒரு சந்ததியை மீதியாக வைக்காதிருந்தாரானால் நாம் சோதோமைப் போலாகி கொமோராவுக்கு ஒத்திருப்போம்” (ரோம.9:29). அந்த சந்ததி விசுவாசத்தின் சந்ததி என காண்கிறோம். ஆகையினாலே, நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், **உன் சந்ததிக்குள்** பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் ஆபிரகாமைப்பார்த்துச் சொன்னார். “ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல் உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்த சந்ததி கிறிஸ்துவே” என பவுல் நமக்குத் தெளிவுபடுத்துகிறார் (கலா.3:16). நீங்கள் அந்த சந்ததியைச் சார்ந்தவர்களாயிருக்கிறீர்களா? “மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில்



கோபம் மூண்டது தேவன் மோசேயை கூப்பிட்டு கர்த்தருடைய உக்கிரமான கோபம் இஸ்ரவேலரை விட்டு நீங்கும்படி சூரியனுக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதானத்தில் தூக்கி போடும்படி செய் என்றார். உடனே மோசே இஸ்ரவேலின் நியாதிபதிகளை நோக்கி நீங்கள் பாகால்களைப் பற்றிக்கொண்ட மனிதரை கொன்று போடுங்கள் என்று கட்டளையிட்டான். அவர்களும் அப்படியே செய்தார்கள். ஆனால் அங்கு அப்படி நடந்துக்கொண்டுஇருக்கும் போது இஸ்ரவேல் புத்திரரில் ஒருவர் மீதியானிய ஸ்திரீயை தன் சகோதரரிடத்தில் அழைத்து கொண்டுப்போனான். அதனை பார்த்து கொண்டு இருந்த ஆரோனின் குமாரனான எலேயாசரின் மகன் பினெகாஸ் தன் ஈட்டியினை எடுத்துக்கொண்டு போய் இஸ்ரவேலின் புத்திரையும், மீதியானிய ஸ்திரீயையும் ஈட்டியால் கொன்றுப்போட்டான் இதினிமித்தம் தேவன் உக்கிரத்தைவிட்டு திரும்பினார் என்று வேதத்தில் பார்க்கிறோம். அதுமட்டுமல்ல தேவன் சொன்ன வார்த்தையானது (எண்:25:11,12) பினேகாஸ் பக்தி வைராக்கியம் காண்பித்ததினால் இஸ்ரவேல் புத்திரரின் மேல் உண்டான என் உக்கிரத்தை திருப்பினான் ஆகையால் இதோ அவனுக்கு என் சமாதானத்தின் உடன்படிக்கையை கட்டளையிடுவேன் என்று தேவன் சொன்னார்.

ஆம், பிரியமானவர்களே, நாமும்கூட தேவனுக்குமுன்பாக எல்லா காரியத்திலும் பக்திவைராக்கியமாய் இருப்போமானால் தேவன் நமக்கும் சமாதானத்தை தரக்கூடியவராயிருக்கிறார். (தானியேல் 2:16-18) வசனத்தில் பார்க்கும்போது நேபுகாத்நேச்சர் என்னும் ஒருவன் அறுபது முழ உயரமும் ஆறுமுழ அகலமுமான ஒரு பொற்சிலையை செய்து அதைத்தான் எல்லோரும வணங்கவேண்டும் என்று கட்டளையிட்டான் அதன்படியாக அன்று வாழ்ந்த மக்கள் அந்த பொற்சிலையை வணங்கி பணிந்துகொண்டார்கள் ஆனால் அந்நாட்களிலே தேவனுக்கு பயந்த 3பேர் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற இவர்கள், ராஜா நிறுத்தின பொற்சிலையை வணங்கவில்லை இதனை கண்ட ராஜாவின் ஆட்கள் ராஜாவினிடத்தில் போய் யூதரான மனுஷர் உம்மை மதிக்கவில்லை உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்யவில்லை என்று சொன்னார்கள் உடனே ராஜா கோபம் அடைந்து அவர்களை கொண்டுவா என்றார் உடனே இந்த மூன்று பேரையும் கூப்பிட்டு கொண்டு வந்தார்கள். ராஜா அவர்களை பார்த்து நான் செய்து வைத்த சிலையை ஏன் பணிந்து கொள்ளவில்லை அப்படி பணிந்து கொள்ளவில்லை என்றால் அந்நேரமே எரிகிற அக்கினிச்சூளையின் நடுவே போடப்படுவீர்கள் உங்களை என் கைக்கு தப்புவிக்கப்போகிற தேவன் யார் என்று கேட்டான். அதற்கு இவர்கள் இந்த காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல அவசியமில்லை என்று தேவன் மீது கொண்டிருந்த பக்தி வைராக்கியத்தின் நிமித்தம் ராஜாவைப் பார்த்து பயப்படாமல் தைரியமாக எதிர்த்து சொன்னார்கள் என்று பார்க்கிறோம். அதுமட்டுமல்லாமல் நாங்கள் ஆராதிக்கிற தேவன் எங்களை தப்புவிக்க வல்லவராயிருக்கிறார் நாங்கள் பயப்படத்தேவையில்லை என்றார்கள் அப்படி எங்கள் தேவன் எங்களை இந்த ஆபத்தில் இருந்து விடுவிக்காமல் போனாலும் நீர் நிறுத்தின பொற்சிலையை வணங்க மாட்டோம் என்று உறுதியாக கூறிவிட்டார்கள். இதனைகேட்டு கொண்டு இருந்த ராஜா ஆத்திரம் அடைந்து அவனிடத்தில் பணிபுரியும் மூன்று பலசாலியை கூப்பிட்டு இவர்களை அந்த அக்கினி சூளையில் போடுங்கள் என்றான். அவர்களும் அப்படியே செய்யதொடங்கினார்கள், அங்கு என்ன நடந்தது தெரியுமா? அந்த மூன்றுபேரையும் அக்கினியில் போட்ட உடனே தூக்கிக்கொண்டுபோன மூவரையும் அக்கினி பட்சித்துப்போட்டது. தேவ மனிதர்களுக்கோ ஒரு சேதமும் ஏற்படவில்லை.

# பக்தி வைராக்கியம்

*- GVelusamy*

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசுவின் மூலம் வாழ்த்துதல் உண்டாவதாக. பக்தி வைராக்கியம் என்ற தலைப்பின் கீழாக உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் தேவன் மீது பக்தி இருக்கும் ஆனால் வைராக்கியம் என்பது சற்று குறைவாக இருக்கும். ஆனால் தேவனுடைய காரியத்தில் பக்திவைராக்கியமாய் இருக்கிறார்களா என்று பார்க்கும்போது குறைவாக தான் இருக்கிறோம். இப்படி நாம் வாழும்போது வேதாகமத்தில் தேவனுக்கு பக்திவைராக்கியமாக வாழ்ந்த சிலரை குறித்து இந்தநாளில் தியானிப்போம்.

பழைய ஏற்பாடு (ஆதி.39:1-23) இந்த அதிகாரத்தில் ஆராய்ந்து பார்க்கும்போது யோசேப்பு என்னும் ஒரு மனிதன் தேவனுக்கு எல்லா காரியத்திலேயும் பயந்தவனாக வாழ்ந்து வந்தான் அவனை எகிப்தியரிடம் விற்றார்கள் அவனை வாங்கிய தன் எஜமான் யோசேப்போடு கர்த்தர் இருக்கிறார் என்பதை உணர்ந்து அவனுக்கு எல்லா அதிகாரத்தையும் கொடுத்துவிட்டு எஜமான் சாப்பிடும் சாப்பாட்டை தவிர மற்ற ஒன்றையும் விசாரியாமல் இருந்தான் என்று வேதத்தில் பார்க்கிறோம். இவ்வளவு அதிகாரம் கொண்ட யோசேப்பு தன் தேவனுக்கும் தன் எஜமானுக்கும் பயந்து வாழ்ந்து வந்தான் ஆனால் யோசேப்புக்கு ஒரு சோதனை வந்தது என்னவென்று பார்க்கும்போது யோசேப்பு அழகு உள்ளவனாய் இருந்தபடியால் தன் எஜமானின் மனைவி யோசேப்பு மீது ஆசை வைத்து தன்னோடு சயனி என்று கூப்பிட்டாள் அதற்கு யோசேப்பு என்ன வார்த்தை சொன்னான் தெரியுமா? நீங்கள் என் எஜமானின் மனைவி அதுமட்டுமல்லாமல் உங்களை தவிர எனக்கு எல்லாவற்றின்மேலும் அதிகாரமும் உண்டு என்று சொன்னான். ஆம் பிரியமானவர்களே அதுமட்டுமல்லாமல் நான் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி என்று தேவனிடத்தில் மிகுந்த பக்தி வைராக்கியம் உள்ளவனாய் இருந்தான் என்று பார்க்கிறோம். ஒரு நாளில் வீட்டில்யாரும் இல்லை யோசேப்பு தனியாய் இருப்பதை எஜமானின் மனைவிகண்டு அவன் அருகே சென்று சயனி என்றாள். உடனே யோசேப்பு தன் சட்டையை அவள்கையிலே விட்டு வெளியே ஓடிவந்தான் இதனை கண்ட எஜமானின் மனைவி கூச்சலிட்டு எல்லோரும் வாருங்கள் யோசேப்பு என்னோடே சயனிக்கும் படி வந்தான் ஆனால் கூச்சலிட்ட பிறகு சட்டையை கழற்றி விட்டு வெளியே ஓடிவந்துவிட்டான் என்று சொல்லி எஜமான் வருமளவும் சட்டையை கைகளில் வைத்து இருந்தாள் உடனே எஜமான் யோசேப்பை சிறையில் அடைத்தான். இதனை ஏன் பார்க்கிறோம் என்றால் யோசேப்புக்கு எல்லா அதிகாரமும் இருந்தது வீட்டிலேயே யாரும் இல்லை அவன் ஏஜமானின் மனைவியோடு சயனித்து இருக்கலாம். ஆனால் யோசேப்பு தேவன் மீது பக்தி வைராக்கியம் வைத்ததினால், தேவனுக்கு பயந்ததினாலும் தேவனுக்கு விரோதமாய் பாவம் எப்படி செய்வேன் என்றான் இப்படி இருந்த யோசேப்பை அவனது சிறை வாழ்வுக்குப்பின் தேவன் உயர்த்தினார் என்று பார்க்கிறோம். கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, நாமும் கூட தேவனுக்கு பயந்து பக்திவைராக்கியமாய் வாழ்வோம். (எண். 25:1-13) வசனத்தை ஆராய்ந்து பார்க்கும்போது இஸ்ரவேலர்கள் சித்தீமிலே தங்கியிருக்கும்போது மோவாப்பின் குமாரத்திகளோடு வேசித்தனம் பண்ண தொடங்கினார்கள் அதுமட்டுமல்லாமல் பாகால்களை பணிந்துக்கொண்டு நமஸ்கரிக்கவும் செய்தார்கள் அதனால் இஸ்ரவேலர் மீது கர்த்தருடைய



சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்" (1பேது.2:4,5). இந்தவிதமான நம்பிக்கையில் வளர்ந்துபெருகுங்கள்.

**கிறிஸ்தவம் என்பது தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியா?**

ஆம். தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததிதான். இது குறித்து பேதுரு தமது நிருபத்தில் எழுதியிருக்கிறார். "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும் இருக்கிறீர்கள்" என்கிறார் (1பேது.2:9). நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியில் உங்களை அங்கமாக்கிக்கொள்ள இன்றே தீர்மானம் செய்யுங்கள். மனிதன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? என திருமறை கேள்வி எழுப்புகிறது. நீங்கள் உங்களுடைய ஆத்துமாக்களை நல்வழிபடுத்த விசுவாச சந்ததியில் உங்களை இணைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**ஒவ்வொரு முறையும் கடிதம் எழுதும்போது அல்லது மணியாடர், காசோலை அனுப்பும்போதும் உங்களுடைய (பதிவு எண்) Ref.No-யை எழுதவும்.**
**நீங்கள் முகவரி மாறும்போது உங்களுடைய புதிய முகவரி மற்றும் பழைய பதிவு எண் அதாவது Ref.No. ஐ தெரியப்படுத்தவும்.**

## பொது அறிவு சோதனை


1. ரத்தம் உறைவதற்கு தேவையான வைட்டமின் எது?
அ) வைட்டமின் 'ஏ' ஆ) வைட்டமின் 'பி' இ) வைட்டமின் 'கே'
2. 'டைனமைட்டை' கண்டுபிடித்தது யார்?
அ) மேரி கியூரி ஆ) ஆல்பிரட் நோபல் இ) மைக்கேல் பாரடே
3. பிப்.28 தேசிய அறிவியல் தினம் யாருடைய நினைவாக கொண்டாடப்படுகிறது?
அ) சி.வி.ராமன் ஆ) ஹோமி பாபா இ) விக்ரம் சாரா பாய்
4. தெற்கு பிரிட்டன் என்று அழைக்கப்படும் நாடு எது?
அ) ஸ்காட்லாந்து ஆ) சிங்கப்பூர் இ) நியூசிலாந்து
5. அயோடின் சத்துக்குறைவினால் உண்டாகும் நோய் எது?
அ) நீரிழிவு நோய் ஆ) ரத்தசோகை இ) கழுத்து கழலை நோய்

விடைகள்: 1. இ 2. ஆ 3. அ 4. இ) 5. இ

# நிதானமாய்ப் பகுக்கப்பட்டிருக்கிற வசனம்

## Rightly Dividing the Word

J.C.Choate




அநேகர் வேதாகமத்தை வாசிக்கும்போது குழப்பமடைந்துள்ளனர். ஏனென்றால் அவர்கள் ஏதோ ஒரு புத்தகம், அத்தியாயம் மற்றும் வசனம் போன்றவற்றை படிக்க வேதாகமத்தை திறக்கலாம் அதன்பின் தேவன் தங்களோடு தனிப்பட்ட விதத்தில் பேசிக்கொண்டிருக்கிறார் என நினைக்கின்றனர். இப்படிச் செய்வதினால், அவர்கள் தேவன் தங்களை ஒரு திடமான பெட்டியைக் கட்டும்படி, மிருக பலி செலுத்தும்படி அல்லது வருடத்திற்கு ஒருமுறை எருசலேமுக்குச் சென்று தொழுதுகொள்ளும்படி விரும்புகிறார் என முடிவெடுக்கலாம். மற்றவர்கள் தாங்கள் ஓய்வுநாளில் தொழுதுகொள்ள வேண்டும் என நம்புகின்றனர், தங்களுடைய வருமானத்தில் 1/10 பங்கு கொடுக்கின்றனர், மேலும் "பத்துக்கட்டளைகளை" கைக்கொள்கின்றனர். நிச்சயமாகவே, அவர்கள் வசனத்தைச் சரியாகப் பகுத்துப் படிக்காததே அவர்களுடைய பிரச்சனையாயிருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல், "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" (2தீமோ.2:15) என்றார். ஒருவன் தேவனுடைய சித்தத்தை அறிய விரும்பினால், அவருடைய வசனத்தைக் கண்டிப்பாக படிக்க வேண்டியிருக்கிறது, ஆனால் ஒருவன் வேதாகமத்தை படிக்காமல், தொடர்ந்து குழப்பத்திலும் என்ன செய்வதென்று அறியாமலுமிருக்கலாம். பவுல் சொல்லுகிறபடி, வசனத்தைப் நிதானமாய்ப் பகுத்துப்படிப்பதே இதற்கான விடையாயிருக்கிறது. ஆனால் அவன் என்ன புரிந்துகொள்கிறான்?

வேதாகமம் 15 நூற்றாண்டுகளுக்கு மேலாக எழுதப்பட்டிருக்கிறது என்பதை நாம் கண்டிப்பாக வேதாகமத்திலுள்ள அனைத்தும் நேரடியாக உங்களுக்கும் எனக்கும் எழுதப்பட்டிருக்கவில்லை என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். எனவே, "நிதானமாய்ப் பகுத்து" எழுதப்பட்ட இந்த கருத்தினை நாம் ஆழ்ந்து நோக்குவோமாக.



நிறைவுள்ளவளாய்ப் போனேன்; கர்த்தர் என்னை சிறுமைப்படுத்தி, சர்வவல்லவர் என்னை கிலேசப்படுத்தியிருக்கையில்.'' (ரூத்.1:21) என்று அங்கலாய்த்துக் கொண்டாள். அன்புசகோதரரியே, நாம் கர்த்ரை ஏற்றுக்கொண்டவுடனே, கர்த்தர் எல்லாவித உலக ஆசீர்வாதங்களையும் குறைவில்லாமல் தருவேன் என நமக்கு வாக்குப்பண்ணவில்லை. ஆனால் 'தேவன் நம்மோடிருப்பதாக' (மத். 1:23) வாக்குப்பண்ணியுள்ளார். இந்த ஆசீர்வாதம் பெரிதல்லவா? அவர் இந்த பூமியிலே நம்மோடிருப்பாரானால், மறுமையில் மேலான இடத்தில் அவரோடுகூட நாம் இருக்கப்போவது அதிக நிச்சயமல்லவா? அன்பு சகோதரியே வரப்போகிற மேலான ஆசீர்வாதத்தை நினைத்து நம்முடைய பழைய செய்கைகளைக் களைந்து போடுவோமாக!

மேலும் மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட **புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்**'' (எபே.4:24) ஆம். எவ்வாறு புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுவது? மெய்யான அதாவது உண்மையான நீதியிலும், பரிசுத்தத்திலும் நம்மை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் மாறும்போது புதிய மனுஷனைத் தரித்துகொள்கிறோம். அதாவது ஆதாமின் கீழ் பாவத்திற்குட்பட்ட நம்முடைய பழைய மனுஷன் அவரோடகூடச் (இயேசுவோடுகூட) சிலுவையில் அறையப்படும் போதும் புதிய மனுஷனைத் தரித்துக்கொள்வோம். பவுல் இதனையே ``கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்...'' (கலா. 2:20) என்கிறார். ஏனெனில் ``அவரே (இயேசுவே) தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்.'' (1 கொரி 1:31) இப்படியாக நீதியும் பரிசுத்தமுமாயிருக்கிற இயேசுவைத் தரித்துக்கொள்ளும்போது கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நமக்குள்ளும் குடிகொள்ள ஆரம்பிக்கிறது. இப்படியாக நாம் புதிய மனஷனைத் தரித்துக்கொள்கிறோம்.

அன்பான சகோதரியே, இதுவே தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற ஒன்றாகும். வீழ்ந்துபோன ஆதாமின் பாவசுவாபத்திலிருந்து நம்முடைய மனதையும், நம்முடைய செய்கைகளையும் களைந்து போட்டு புதிய மனுஷனைத் தரித்துக்கொள்வோம். மீண்டும் ஏதேனின் (The Happy Place) வாழ்விற்கு திரும்ப, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தமே பரிகாரமாயிருப்பதினால் அவரை விசுவாசித்து, அவரே ஜீவனுள்ள தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்போது பரிசுத்தஆவியின் வரத்தைப்பெற்று புதிய மனுஷியாக மாறுவீர்கள். பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோம். எல்லாம் புதிதாகும். அப்போது கர்த்தர் தம்முடைய சபையிலே உங்களை சேர்த்து, போஷித்துக் காப்பாற்றுவார். அவருடைய மந்தையில் சேர்ந்து உள்ளும் புறம்பும் மேய்ச்சலைக் கண்டு நித்திய ஆசீர்வாதம் பெற கர்த்தர் தாமே உதவிசெய்வாராக!

(எபேசி.4:23) என வேதம் கூறுகிறது. பழைய ஜென்ம சுபாவங்களாகிய கோபம், மேட்டிமை, பொய், அசுத்தம், புறங்கூறுதல், கோள்ச்சொல்லுதல், சுயநலம், இன்னும் இது போன்ற அநேக காரியங்களை நம்மிலிருந்து அப்புறப்படுத்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நம் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுமாத்திரமல்ல, நம்முடைய இப்பேர்பட்ட பாவங்கள் மன்னிக்கப்பட்டு உள்ளத்தில் புதிதான ஆவியினை பெற ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும். அப் 2:38 ‘‘நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்’’ என்கிறது. அப்படியானால் ஞானஸ்நானத்தின் மூலம் நாம் உள்ளத்திலே பரிசுத்த ஆவியாகிய அந்த புதிதான ஆவியுள்ளவர்களாக மாறுவோம். அப்போது பழையவைகள் ஒழிந்துபோகும். இவ்வாறாக நம்முடைய மனம் புதிதாகி நாம் நம்முடைய பழைய பாவநிலையிலிருந்து மாறி மறுரூபமடைவோம்.

இதையே கொலோசெயர் 3:8-9ம் கூட ‘‘இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும் உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; **பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு,’’** என வலியுறுத்துகிறது. மேற்கூறப்பட்டுள்ள இத்தகைய செய்கைகள் நம்மிடம் இருக்கின்றனவா? அப்படியிருக்குமானால் அவைகளை களைந்து போட இப்போதே முயற்சிப்போம். கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளை சுதந்தரித்துக்கொள்ள நாம் அழைக்கப்பட்டுள்ளோம். பூமிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற அநேகர் அடித்துக்கொள்ளுகின்றனர். ஓயாது தங்களுடைய மேன்மையையே நாடி மற்றவர்களையும் காயப்படுத்தவோ அல்லது பிறருக்குத் தீமைசெய்யவோ துணிகின்றனர். அன்பு சகோதரியே, இழிவான ஆதாயத்தை நாடிப் போவாயானால், தேவனுடைய வலது பாரிசத்திலுள்ள மேலானவைகளை எப்படி பெற்றுக்கொள்ளுவாய்? கிறிஸ்துவுக்குப் பிரியமில்லாத உங்களுடைய செய்கைகளினால் மேலான ஆசீர்வாதத்தை இழந்துவிடாதீர். லோத்தின் மனைவி அன்று பூமிக்குரியவைகளைத் திரும்பிப்பார்த்து உப்புத்தூணாகி மேலான காரியத்தை இழந்தாள். ஒருவேளை வரக்கூடிய பிரச்சனைகளின் அழுத்தத்தினாலும், பாரத்தினாலும் கிறிஸ்துவுக்குப் பிரியமான செய்கைகளை என்னால் செய்யமுடிகிறதில்லை. கர்த்தரை நம்பி இத்தனை நாட்களாக என் துன்பமும் துயரமும் எங்கே ஒழிந்தன, விரும்பாத காரியங்களே என் வாழ்வில் நடக்கிறது, அநேக இழப்புகளையும், வியாதிகளையுமே அனுபவிக்கிறேன் என்று அங்கலாய்த்துக்கொண்டிருக்கிறீர்களா? அன்று நகோமி தன்னுடைய புருஷனையும், தன்னுடைய குமாரர்களையும் இழந்தாள். நான்



இதை ஆராய, "வேதாகமம்" என்ற பதத்தின் பொருள் "புத்தகம்" அல்லது "புத்தகங்களின் புத்தகம்" என்பதை அறிய வேண்டும். பொதுவாக வேதாகமம் தனித்தனியான 66 புத்தங்களை உள்ளடக்கியது. இது இரண்டு பெரிய பிரிவுகளாக, அதாவது "பழைய ஏற்பாடு" மற்றும் "புதியஏற்பாடு" என்று பிரிக்கப் பட்டுள்ளது. இரண்டு பெரிய காலக்கட்டத்தைக் கொண்ட 39 புத்தங்கள் பழைய ஏற்பாட்டில் அடங்கியுள்ளது. முதலாவது காலம் "முற்பிதாக்களின் காலம்" என அழைக்கப்படுவதோடு ஆதாம் மற்றும் ஏவாளில் தொடங்கி மோசே வரைக்கும் 25 நூற்றாண்டுகள் ஆகும். இக்காலக்கட்டத்தின்போது தேவன் தமக்குக் கீழ்ப்படிந்திருந்த கோத்திரங்களின் முற்பிதாக்களோடு நேரடியாகப் பேசினார். அப்போது தேவனிடமிருந்து எழுதப்பட்ட கட்டளை இல்லை. "இந்தக் கால" வரலாறு ஆதியாகம புத்தகத்தில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது காலம் "மோசேயின் காலம்" என அழைக்கப்படுகிறது. இது மோசேயின் காலத்திலிருந்து கிறிஸ்துவின் மரணம் வரைக்கும் 1500 வருடங்களைக் கொண்டது. இந்த காலத்தில் தேவனுடைய ஜனங்கள் இஸ்ரவேல் ஜனங்கள், ஆபிரகாமின் முற்பிதாக்கள் - மோசே மூலம் தேவன் கொடுத்த கட்டளையின் மூலம் ஆளுகை செய்யப்பட்டனர். அந்த ஜனங்களை தெரிந்தெடுப்பதற்கும் கட்டளையையும் கூட கொடுப்பதற்கும் காரணம், தேவனுடைய குமாரனின் பிறப்பிற்காக ஒரு வழியை ஆயத்தப்படுத்தவே.

மூன்றாவதும் கடைசியானதுமான காலம் "கிறிஸ்வர்களின் காலம்" கிறிஸ்துவின் மரண நாளிலிருந்து மேலும் அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் எழுதப்பட்டதின்படி அவருடைய ஆவிக்குரிய குடும்பமாகிய சபையின் ஆரம்ப காலமாகும். இந்தக் காலம் அவர் மீண்டும் வரும் வரை தொடரும். காலம் நிறைவேறும் போது அவர் தமது சபையை அவர் ஆயத்தம்பண்ணும்படி சென்ற அந்த நித்திய உலகத்திற்குள் ஏற்றுக்கொள்வார் (யோவா.14:1-3).

நாம் இப்போது முற்பிதாக்களின் காலத்தில் அல்லது கிறிஸ்துவின் மரணத்தோடு முடிவுபெற்ற மோசேயின் கட்டளைக்குக் கீழாகவும் வாழவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. மிஞ்சியிருப்பது ஒரே ஒரு காலக்கட்டம் அல்லது காலம் - அது கிறிஸ்துவின் கட்டளைக்கு கீழான கிறிஸ்தவர் காலம் - ஏனென்றால் நாம் இந்த காலத்தில் வாழ்கிறோம் மற்றும் நாம் கண்டிப்பாக கைக்கொள்ள வேண்டிய கட்டளையும் இதுவே.

நாம் முற்பிதாக்களின் காலம் அல்லது மோசேயின் காலத்தில் வாழ்ந்துகொண்டிராதபடியினால், அந்த கட்டளைகள் நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கவில்லை! அது நியாயமில்லையா? நிச்சயமாக இது நியாயமே. எனவே, உதாரணத்திற்கு பழைய ஏற்பாட்டினையும், அதன் வரலாற்றினையும் நாம் அதிகமாகக் கற்றுக்கொள்ளும்போது அது நமக்கு விலையேறப் பெற்றதாயிருக்கும். ஆனால் தேவன் அந்தக் கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படியும்படி விரும்பவில்லை.

இக்குறிப்பிற்கு, நாம் "வசனத்தை நிதானமாய்ப் பகுத்திருக்கிறோம்" இப்போது நாம் கிறிஸ்தவர்கள் காலத்தில் வாழ்கிறபடியால், இது நாம் கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டியவர்கள் என்பது நியாயமானதாயிருக்கிறது. நாம் மிருக பலி பற்றி அல்லது ஒரு திடமான பெட்டியைக் கட்டுவது பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை - அந்தக் கட்டளைகள் மற்ற ஜனங்களுக்கு வேறு

காலங்களில் கொடுக்கப்பட்டது! ஆனால் நமது கடமை கிறிஸ்துவின் கட்டளையைக் கைக்கொள்வது மட்டுமே! இது எளிதானது இல்லையா?

ஒரு நியாயமான தொகுப்பின் கேள்விகள் புதிய ஏற்பாட்டினை நாம் நிதானமாய் பகுத்து படிக்க நமக்கு உதவியாயிருக்கும். **முதலாவது,** பேச்சாளர் யார்? இது தேவனா, சாத்தானா, சில வேதாகம கதாபாத்திரங்களா, அல்லது மற்ற நபரா? **இரண்டாவது,** அவர் யாருடன் பேசிக் கொண்டிருக்கிறார்? அவிசுவாசியுடனா, கிறிஸ்தவர்களுடனா, பொது ஜனங்களுடனா, அல்லது குறிப்பிட்ட நபருடனா? **மூன்றாவது,** இது எப்பொழுது பேசப்பட்டது? துவக்க சபையின் ஸ்தாபன இடத்திற்கு (பேசப்பட்ட வார்த்தையை உறுதிசெய்யும்படிக்கு அற்புதங்களைச் செய்த நிகழ்ச்சியில் இருந்தது போல்) அல்லது அனைத்து கிறிஸ்தவர்களின் காலத்திற்கு மட்டுமா? **நான்காவது,** இது ஏன் பேசப்பட்டது? தேவன் சில குறிப்பிட்ட சத்தியம் அல்லது வழிநடத்துதல்கள் போன்றவற்றை ஒரு குறிப்பிட்ட காலம் அல்லது ஸ்தாபனம் அல்லது நபர் போன்றோருக்கு வெளிப்படுத்திக் கொண்டிருந்தாரா?

கண்டிப்பாக, இப்போதே நீங்கள் தேவன் உங்களுடன் தம்முடைய வார்த்தையின் மூலம் பேசிக்கொண்டிருக்கிறாரா அல்லது யாரோ ஒருவருடைய செய்தியின் மூலமா என்று கண்டுபிடிக்க ஆரம்பிக்கின்றீர்கள். இக்கேள்வி களுக்கான பதில்கள் தேவன் நீங்கள் செய்யும்படி எதை விரும்புகிறார், அதை எப்படி செய்யவேண்டும், அதை எப்போது செய்யவேண்டும் என அறிந்துகொள்ள இது உங்களுக்கு ஏதுவாகயிருக்கும்.

உங்களுடைய கற்றுக்கொள்ளுதலில் உங்களுக்கு உதவிட வசன விளக்கவுரைக்கு நீங்கள் ஒரு வேதாகம அகராதியைப் பெற்றுக்கொள்ளலாம், ஒரு ஒத்த வாக்கிய வேதாகமம் அதிகமானவற்றை பட்டியலிடும் அல்லது நீங்கள் கற்றுக்கொண்டிருக்கிற பாடப்பகுதியின் வசனங்கள் எல்லாவற்றையும் கூட; நீங்கள் வியாக்கியானங்கள், மற்ற புத்தகங்கள் மற்றும் இது சம்பந்தப்பட்ட மற்ற பொருட்கள் போன்றவற்றின் அடிப்படையில் இப்பகுதிகளையும் வேதவாக்கியங்களையும் விவாதித்துக் கொள்ள முடியும். இப்போது, நீங்கள் வேதாகமத்தை வாசித்துக் கற்றுக்கொள்ளும்போது, மேற்குறிப்பிடப்பட்ட எல்லாவற்றையும் மனதில் கொண்டு, நீங்கள் மிக எளிதாக தேவனுடைய வார்த்தையைப் புரிந்துகொள்ளலாம். நீங்கள் கற்றுக்கொள்கையில், நீங்கள் சத்தியத்தை அறிவதற்கு தாகமுள்ளவராக நீங்கள் கண்டிப்பாக ஜெபத்துடன் இருப்பீர்கள் மேலும் நீங்கள் கற்றுக்கொண்ட சத்தியத்தை ஏற்றுக் கொள்வீர்கள், இது உங்களை என்ன ஆலோசிக்கச் செய்கிறது என்பது பற்றி ஒன்றுமில்லை.

சாத்தானும் அவனுடைய வேலையாட்களும் எல்லாவகையான தடுக்கலையும் இடறல்களையும் உங்கள் வழிகளில் வைத்து, உங்களை குருடாக்கும்படி, உங்களை வஞ்சிக்கும்படி, தேவனுடைய சித்தத்தை கற்றுக்கொள்வதற்கு இது மிகக் கடினமானது என உங்களை நினைக்கப்பண்ணுவதற்கு உங்கள் மனதில் வைத்துக்கொள்ள இன்னொரு செயலாகும். இதைச் செய்ய அவனை அனுமதிக்காதீர்கள்! வேதாகமத்தை வித்தியாசமாக வாசிக்கும் ஒவ்வொருவரையும் நம்பச் செய்யவும் மேலும் அவன் நீங்கள் எதையெல்லாம் நம்புகிறீர்களோ அது சரியானது என்றும் உங்களை அவன் நம்பச் செய்வான். ஆனால் 2பேதுரு1:20-ல் நாம் "வேதத்திலுள்ள எந்தத்



# எல்லாம் புதிதாயின

## All Things Have Become New

-Glory Arjunan




அன்பு சகோதரியே, எல்லாம் புதிதாயின! இவ்வசனத்தை அடிக்கடி வாசித்திருப்போம். சில வேளைகளில் பிரசங்கத்திலும் கேட்டிருப்போம். நாமும்கூட எல்லாம் புதிதாகவேண்டும், பழைய பாடுகள். பிரச்சனைகள், தோல்விகள், நோய்கள் எல்லாமே நம்மை விட்டு அகல வேண்டுமென விரும்புகிறோம். ஆனால் தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் அந்த புதியவைகள் எவைகள் என நாம் அறிந்துகொள்வது இக்கடைசி காலத்திலுள்ள நமக்கு மிகவும் அவசியமென நினைக்கிறேன்.

ஆவியானவர் பவுலின் மூலம், **"..உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்"** (ரோம.12:2) என திருவுளம்பற்றுகிறார். ஆம், நம் மனம் மறுரூபமாக வேண்டும். மறுரூபம் என்றால் என்ன? ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாற்றமடைவது. அதாவது பழைய நிலையிலிருந்து புதியநிலைக்கு மாற்றமடைவது. அப்படியானால் மனதளவில் நம்முடைய நிலை என்ன என்பதை தேவனுடைய வார்த்தையின் துணை கொண்டு அறிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் நம்முடைய உள்ளிந்திரியங்களை தேவன் ஒருவரே அறிவார். நம்முடைய இருதயம் செம்மையாக இருக்கிறதா? அல்லது திருக்குள்ளதாயிருக்கிறதா? என்பதையும் அவர் அறிவார். அவருடைய கண்களுக்குமுன் ஒன்றும் மறைவானதில்லை என வேதம் கூறுகிறது. அன்பு சகோதரியே, இன்றைய நாட்களில் எங்கும் மாய்மாலம் பெருகியுள்ளது. அநேகர் தங்கள் உதடுகளினால் இனிமையாகப் பேசுவர், ஆனால் தங்கள் உள்ளத்திலோ வஞ்சகம் அல்லது கபடு நிறைந்து காணப்படும். ஆனால் நாமோ மிகவும் ஞானமுள்ளவர்களாய் நடந்துகொள்ள வேண்டியது மிக அவசியமாயிருக்கிறது. கிறிஸ்துவுக்கு வெளியே அல்லது புறம்பே இருக்கிறவர்களுக்கு முன்பாக மிக ஞானமுள்ளவர்களாக நடக்கவேண்டும். வேதமும் அவ்வாறே கூறுகிறது "புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" என (கொலோ. 4:5) போதிக்கிறது. ஒருவேளை நாமோ, கிறிஸ்துவுக்கு வெளியே அல்லது புறம்பேயிருக்கிறவர்களைப் போல மாய்மாலம் பண்ணிக்கொண்டு வாழ்வோமென்றால் முதலாவது நாம் நம்மை சரிசெய்து கொள்ள வேண்டும். நம்முடைய மனம் பலவிதமான பாவங்கள் நிறைந்து பழைய ஆதாமின் நிலையிலிருக்குமானால் நம் மனம் புதிதாக வேண்டியது அவசியம் "உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி,"

நம்முடைய இருதயங்களை அழைக்கிறது. **பிறகு அந்த கோட்பாட்டின் அமைப்பிற்கு இருதயத்திலிருந்து கீழ்ப்படிகிறோம்.** சுவிசேஷம் - மரணம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதல் - என்பவை எந்த அமைப்பை நம்முடைய சொந்த வாழ்வில் ஏற்படுத்துகிறது? ரோமர்6:3-11.

"கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்.

ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால் அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே.

ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனே கூடப்பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம். மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்; மரணம் இனி அவரை ஆண்டு கொள்வதில்லை. அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்.

அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்" என்று விடையளிக்கிறது.

எனவே, கிறிஸ்துவின் மரணத்தின்மூலம் நம்முடைய தனிப்பட்ட சொந்த ஆத்மாக்களுக்கு புத்திர உறவை ஏற்படுத்தி உரிமைபாராட்ட விரும்புவோமானால், நாம் கண்டிப்பாக அவருடைய மரணத்தின் மாதிரியின்படி பாவத்திற்கு **செத்து,** ஞானஸ்நானத்தில் அவரோடுகூட அடக்கம்பண்ணப்பட்டு அதன்பின் **உயிர்த்தெழுந்து** அல்லது தேவனுடைய குடும்பத்தில் ஒரு புதிய மனுஷனாக ஒரு புதிய ஜீவியத்தை நடத்தும்படிக்கு ஞானஸ்நானத்திலிருந்து எழுப்பப்பட வேண்டும். **இந்த மரணம் மற்றும் புதிய பிறப்பு இல்லாமல் புதிய வாழ்வு இருக்க முடியாதென** நாம், தனிப்பட்டவிதத்தில் தேவனுக்கு முன்பாக அறிந்து கொள்வது இவற்றின் அதிமுக்கியமானதாகும்.

### **"புதிய மனிதனின்" பிறப்பு** - The Birth Of the "New Man"

இந்த ஒழுங்கு முறையில் என்ன நடைபெற்றுள்ளது? பழைய மனிதனின் மரணத்தில், ஒரு புதிய பிறப்பு உண்டாக்கப்பட்டுள்ளது. இயேசு போதித்தபடி "..... ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் (மறுபடியும்) பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்...." (யோவான்3:3-5).

"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2கொரி.5:17).

**உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன் – வெளி.3:15**



தீர்க்கதரிசனமும் சுயதோற்ற முடையது" என நினைக்கிறவர்களாயிருக்கக் கூடாது என்று சொல்கிறார். நிதானமாய்ப் பகுக்கப்பட்டதும் புரிந்துகொள்ளப்பட்டதும், இதனுடைய செய்தி ஒவ்வொருவருக்கும் ஒரே விதமானதும் ஆகும்.

வேதாகமத்தில் நமது கர்த்தர் உலகத்திற்குத் தம்மையே வெளிப்படுத்தியிருக்கிறார். தம்முடைய வருகையை சொல்லி, அவருடைய ஜீவன் அவருடைய மரணம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதல் போன்றவற்றையும் சொல்லியிருக்கிறார். தேவனிடத்தில் விசுவாசம் வைத்து, தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவே தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்து, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு இரட்சிப்பின் சுவிசேஷம் என்பது நற்செய்தியாகும். புதிய ஏற்பாடு சபையைக்குறித்து, அது ஆவிக்குரிய கிறிஸ்துவின் சரீரம் என்றும், சுவிசேஷத்திற்குக் (மாற்.16:16) கீழ்ப்படிகிறவர்களை கர்த்தர் எவ்வாறு இரட்சித்து, அவர்களை தம் சபையில் சேர்க்கிறார் என்றும் சொல்லுகிறது (அப்.2.47).

தேவன் தாமே அவருடைய வார்த்தையை நாம் வாசித்துக் கற்றுக்கொள்ளவும், அதை நிதானமாய்ப் பகுத்துப்படிக்கவும், அவ்வாறே அவருடைய சித்தத்தை அறிந்து அதற்குக் கீழ்ப்படிந்து, நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கையைக் கொண்டிருக்கவும் நமக்கு உதவிசெய்வாராக!

**வேத அறிவுப்போட்டி: 146 -ன் விடைகள்**

| | |
|---|---|
| 1. ஏலியின் பிள்ளைகள் | -1சாமு.2:17 |
| 2. யோவான் | -1யோ.1:4 |
| 3. அம்னோன் | -2சாமு.13:1 |
| 4. பேதுரு | -மத்.26:33 |
| 5. சிம்ரி | -1இரா.16:18 |
| 6.இயேசு | -மாற்.14:34 |
| 7. ஆம் | -2இரா.14:25 |
| 8. தேவாலயத்திலே | -லூக்.19:47 |
| 9. தாவீது | -1நாளா.21:8 |
| 10. யூதர்கள் | -யோ.18:31 |


**எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் 1தெசலோனிக்கேயர் 5:16**

**வேத அறிவுப்போட்டி: 146-ல் வெற்றி பெற்றவர்கள்**

| | |
|---|---|
| 1. A. ரெபேக்காள் | -மதுரை |
| 1. M. சாலொமோன் | -கோடை |

**இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள் 1தெசலோனிக்கேயர் 5:17**

- சென்ற மாத சகோதரிகள் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்காக...
- கர்த்தருக்குள் மரித்த சகோதரி நட்சத்திரம் அவர்களுடைய குடும்ப ஆறுதலுக்காக...
- சகோதரி குளோரியின் தலைமை ஆசிரியை பதவிக்காக...
- திருச்சி சபை ஊழியங்களுக்காக...
- மாவட்ட ஊழியங்களுக்காக...



பெண்கள் பகுதி

# இயேசு கிறிஸ்து நித்திய பலி

## Jesus Christ the Eternal Sacrifice

*-Betty*



### நம்முடைய மறுமொழி

தேவவாக்கியங்களில் மிகச்சரியான முழுமையான வாசிப்பில் நாம் தொடர்ச்சியான ஆயத்தத்தையும், ஒன்றின்மேல் ஒன்றாக கட்டப்பட்டுள்ளதையும் இறுதியாக மனிதன் தேவனோடு ஒப்புரவாகும்படிக்கு திறந்த வழி கொடுக்கப்பட்டிருக்கிறதையும் காணலாம். பாவத்திற்கான சரீரப்பிரகாரமான தண்டனைக் குரியவை இயேசுவின் மரணத்தில் கிரயமாக்கப்பட்டது. மனிதவர்க்கத்தோடு அவர் கட்டப்பட்டு, தேவனுடைய புத்திர உறவினால் தேவனோடு நம்முடைய புத்திர உறவிற்கு வாய்ப்பு உருவாக்கப்பட்டதின் மூலம் ஆவிக்குரிய ஒப்புக்கொடுத்தல் உருவாக்கப்பட்டது.

இவையெல்லாம் நமக்கு முன் திட்டமிடப்பட்டு, நம்முடைய ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி செய்ய போதுமானதாயிருக்கிறது. ஆனால் மற்றபடி மன்னிப்பின் போர்வை ஒவ்வொரு மனிதனையும் மூடிக்கொள்கிறதில்லை. நாம் எவ்வாறு இதை நமக்கென்று சொந்தமாக்கிக் கொள்கிறோம்? **நாம் எவ்வாறு தனிப்பட்ட முறையில் தேவனுக்கு மறுமொழி கொடுக்கிறோம்?** (யோவா 6:45).

“பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்” என்கிறது. உலக ஜனத்தொகையின் மத்தியில் எல்லாரும் பிதாவின் செய்தியிலிருந்து உண்மையாக கற்றுக்கொள்கிறதில்லை. 2 தெசலோனிக்கேயர் 2:14. “எங்கள் சுவிசேஷத்தினாலே அவர் உங்களை அழைத்தார்” என போதிக்கிறது.

எனவே பிதாவின் செய்தி சுவிசேஷம் நம்முடைய இருதயங்களுக்கு அழைப்புவிடுகிறது. சுவிசேஷம் என்றால் என்ன? இது கொரிந்தியர் 15:3,4ல் இவ்வாறாக விளக்கப்பட்டுள்ளது.

“கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து”

### **ஒப்புக்கொடுத்தல்** - The Commitment

சில ஜனங்கள் செய்தியைக் கேட்டு அதை மறுதலிக்கின்றனர். மற்றவர்கள் கேட்டு இதன் அழைப்பு தங்களுடைய இருதயங்களை உடைக்கிறது என அவர்களுடைய மறுமொழி. பிதாவினிடத்தில் ஒரு உணர்ச்சியுள்ள அன்பு மழையாக தங்களுடைய சித்தத்தை அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும் விருப்பத்தில் உடன்பட்டுள்ளது. அவர்கள் தங்களுடைய ஜீவியங்களில் ஒரு திருப்புமுனை வந்தடைந்தது என்பதை அறிந்து கொள்கின்றனர்.

பரிதாபப்படத்தக்க வகையில் பலர் தங்களுடைய பாவங்களுக்கான மன்னிப்பை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர்கள் தேவனுடைய குடும்பத்தில் ஆவிக்கேற்றபடி பிறந்திருக்கிறார்கள் என்றும் தேவன் மேலுள்ள தங்களுடைய புதிய அன்பு சாட்சிபகருகிறபடியினால் அவர்களுடைய இருதயம் மாற்றப்பட்டு அவர்கள் சந்தோஷமும் அடைகின்றனர் என்று தவறாக நம்புகின்றனர்.



சந்தேகமே இல்லை, திருப்புமுனை, ஒப்புக்கொடுத்தலின் நொடிப்பொழுது போன்றவை இரட்சிப்பினுடைய ஒழுங்குமுறையின் ஒரு கடினமான பகுதியாயிருக்கிறது. நம்முடைய வேதவாக்கிய ஆராய்ச்சியில் எப்போது இதற்கு இணையான ஒரு சம்பவத்தை நாம் காண்கிறோம்? இயேசு மனிதனுக்காக முழுமையான ஒப்புக்கொடுத்தலின் விளிம்பை அடையும்போது கெத்சமனே தோட்டத்தில் இது காணப்படவில்லை அவர் தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்க போராடினபோதும் கூட செய்யப்பட்டுள்ள பாவத்திற்காக திகில் அடைந்ததாக பொருள்பட்டது.

உண்மையாக அவர் அந்த திட்டத்தினை சந்திக்க வேண்டியவராயிருந்தார் மேலும் நம்மைத் தெரிந்துகொண்டாலும் நிராகரித்தாலும் உண்மையாகவே அவர் தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டியவராயிருந்தார் நாம் ஒவ்வொருவரும் அந்தத் திட்டத்தினை சந்திக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் கண்டிப்பாக தேவனை நம்முடைய பிதாவாக தெரிந்துகொள்ள வேண்டும். அல்லது அவரை புறக்கணிக்க வேண்டும். நாம் கண்டிப்பாக நம்முடைய மாம்ச சித்தங்களை அவருக்குக் கீழாகக் கொண்டு வரவேண்டும், கிறிஸ்து நம்முடைய பாவங்களை சுமந்து கொள்வதைத் தெரிந்துகொண்டது போல, நாம் அந்தப் பாவத்திற்கு இனி ஒருபோதும் ஊழியஞ்செய்யக்கூடாது என்ற விருப்பத்தோடு அவைகளை நம்மிடமிருந்து எடுத்துப்போடும்படி அவருக்கு அனுமதி அளிப்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆனால், கிறிஸ்து தோட்டத்தில் மனப்பூர்வமான ஒப்புக்கொடுத்தலோடு முடித்திருந்தார் என நினைக்கலாம். அந்த நேரத்திற்குத் திரும்புகையில்: அவருடைய போராட்டம் நிறைவடைந்தது; அவர் தமக்குள்ளாக சமாதானத்தோடிருந்தார். இன்று தேவனுடைய மன்னிக்கப்பட்ட குழந்தையாக இருக்கும் விருப்பத்தோடு, அன்பினால் அவைகள் அவரிடமாகத் திரும்பும்போது இது பல இருதயங்களை விவரிக்கின்றதில்லையா? அவர் அதை நிறுத்தியிருப்பாரானால், அங்கே **சிலுவை** இருந்திருக்காது, **இரத்தஞ்சிந்துதல்** இருந்திருக்காது, **பாவத்திற்கான கிரயம் செலுத்தப்பட்டிருக்காது, தேவனுடைய பிள்ளைகளாக மாறும்படிக்கு நமக்காக ஒரு வழி உருவாக்கப்பட்டிருக்காது.**

இதே முறையில், தங்களுடைய தனிப்பட்ட சுய ஒப்புக்கொடுத்தல் நிலையில் தடைசெய்கிறவர்கள் பாவத்திற்கு மரிக்கின்ற ஒழுங்கு முறையிலும் கிறிஸ்துவோடு மரிப்பதிலும் அவரோடுகூட உயிர்த்தெழுதலிலும் பங்கடையவே முடியாது.

தேவனால் மன்னிக்கப்பட்ட ஒருவன் என்பதன் அர்த்தம் பாவிக்குள் மனம் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? அவன் அதிகம் கிரியை செய்யவேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறாரா?

### **கிறிஸ்துவோடு மரித்தல்** - Dying with Christ

நமக்காக மரித்த அவருடைய மரணத்தில் நாம் எவ்வாறு கிறிஸ்துவை மிக ஆர்வத்துடன் பின்பற்றுகிறோம்? ரோமர்6:17,18 இவ்வினாவிற்கு

“முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்” என்று நமக்குச் சொல்லுகிறது.

**இவ்வாறாக, மரணம், அடக்கம் மற்றும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலாகிய தேவனுடைய செய்தியை நாம் கேள்விப்படுகிறோம்.**

நாம் இதன் அர்த்தத்தைக் கற்று அறிந்திருக்கிற வண்ணமாக அவருடைய அன்பின் வல்லமையானது பாவத்தை விட்டு திரும்பும்படிக்கு நம்மை அழைத்துக் கொண்டு வருகிறதாகவும் அவருக்கு நம்முடைய ஆத்துமாக்களை ஒப்புக்கொடுக்கும்படிக்கு